செ.வெ.எண்.688 நாள்.14.8.2010

# செய்தி வெளியீடு–14.8.2010

## தமிழக காவல் துறையின்

## 4 அதிகாரிகளுக்கு சமூக சேவைக்கான காவல் சிறப்புப் பணிப்பதக்கங்கள்!

## 9 அதிகாரிகளுக்கு காவல் புலன் விசாரணைக்கான சிறப்புப் பணிப்பதக்கங்கள்!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

இந்திய சுதந்திர தினத்தையொட்டி, காவல் துறையில் சிறப்பாகப் பணிபுரிந்திடும் காவல் துறை அதிகாரிகளுக்கு ஆண்டுதோறும் தமிழக முதலமைச்சரின் சிறப்புப் பணிப்பதக்கங்கள் வழங்கி ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி, 2010 ஆம் ஆண்டு காவல் துறையில் தனித்துப் பொறுப்பேற்று, பணியில் திறமை, உறுதி, மற்றும் அக்கறையுடன் தன்னிகரற்று விளங்கி, சமூக சேவையில் எடுத்துக்காட்டாகத் திகழ்பவர்களான சென்னை தனிப்பிரிவு குற்றப்புனாய்வுத் துறை காவல் கண்காணிப்பாளர் திரு.சி.சந்திரசேகர், இ.கா.ப., சென்னைத் தலைமையிடம் க்யூ பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை துணைக் காவல் கண்காணிப்பாளர் திரு.கே.சந்திரசேகரன், திருநெல்வேலி மாவட்ட தென்காசி காவல் நிலைய காவல் ஆய்வாளர் திரு.ஜே.நாகராஜன், கோயம்புத்தூர் காவலர் தேர்வுப் பள்ளி தலைமைக் காவலர் 1849 திரு. ஆர்.பொன்னுசாமி ஆகிய 4 காவல் அதிகாரிகளுக்கு தமிழக முதலமைச்சரின் சமூக சேவைக்கான காவல் சிறப்புப் பணிப் பதக்கங்களையும்;

அதுபோலவே, புலன் விசாரணைப் பணியில் மிகச்சிறப்பாகப் பணியாற்றியவர்களின் சிறந்த மதிநுட்பம், ஆர்வம், திறமை, கடின உழைப்பு ஆகியவற்றை அங்கீகரிக்கும் வகையில் சென்னை மாநில குற்றப்பிரிவு குற்றபுலனாய்வுத் துறை கள்ள நோட்டு தடுப்புப் பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் திரு.ந.மோகன், சென்னை ஒருங்கிணைந்த குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு துறை துணை காவல் கண்காணிப்பாளர் திரு.வே.பார்த்தசாரதி,

மதுரை சிறப்புப் புலனாய்வுப் பிரிவு, துணை காவல் கண்காணிப்பாளர் திரு.ஐ.தயாளன் தமிழ்செல்வன், சென்னைக் காவல் அசோக் நகர் சரகம் காவல் உதவி ஆணையாளர் திரு.கே.பரந்தாமன், மதுரை மாநகர் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை காவல் ஆய்வாளர் திரு.சீ.மாரிராஜன், சென்னை காவல் ஆர்–7 கே.கே.நகர் காவல்நிலைய காவல் ஆய்வாளர் திரு.க.செல்வமணி, சென்னைக் காவல் ஆர்–6, குமரன் நகர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் திரு.சார்லஸ் சாம் ராஜதுரை, சேலம் மாநகர் அன்னதானப்பட்டி காவல் நிலைய காவல் ஆய்வாளர் திரு.பெ.அசோகன், சென்னை காவல் சி–2 யானைக்கவுனி காவல் நிலைய காவல் ஆய்வாளர் திரு.ஆர்.சுந்தரம் ஆகிய 9 காவல் அதிகாரிகளுக்குத் தமிழக முதலமைச்சரின் காவல் புலன் விசாரணைக்கான சிறப்புப் பணிப் பதக்கங்களையும் வழங்கிட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

இந்த இரண்டு விருதுகளையும் பெறும் 13 காவல் அதிகாரிகள் ஒவ்வொருவருக்கும் தலா எட்டு கிராம் எடையுள்ள தங்கப் பதக்கத்துடன், 5 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் பின்னர் நடைபெறும் ஒரு விழாவில் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் வழங்கப்படும்.

**கு.ஞானதேசிகன்**
முதன்மைச் செயலர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9